**அரக்கோணம் நகராட்சி**
**சாதாரண மன்ற கூட்ட அறிவிப்பு**

கூட்ட எண்.55 நாள்.27.03.2020.

பொருள் : சாதாரண மன்றக் கூட்டம் – அரக்கோணம் நகராட்சி – நாள் 31.03.2020 செவ்வாய் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கூட்டம் நடைபெறுதல் – சம்மந்தமாக.

*****

அரக்கோணம் நகராட்சி 31.03.2020 செவ்வாய் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள சாதாரண மன்ற கூட்டத்தில் கொண்டு வரப்படவுள்ள மன்றப்பொருள்கள் விவரம்.

ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்
அரக்கோணம் நகராட்சி

**பொருள் எண் :01**

நகராட்சி ஆணையாளர்(பொ) (ம) நகராட்சி பொறியாளர் அவர்களின் பிப்ரவரி/2020 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**பொருள் எண் :02**

மாவட்ட ஆட்சித்தலைவர்/பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, வேலூர்–9. அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.அ2/3772/2019 நாள். 27.02.2020 கடிதத்தின்படி பாராளு மன்ற cW¥Ãd® cÿq® gFÂ ts®¢Á திட்டம் 2019–20ஆம் ஆண்டின் கீழ் அரக்கோணம் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர்.எஸ்.ஜெகத்ரட்சகன் அவர்கள் பரிந்துரை செய்த கீழ்குறிப்பிட்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | அரக்கோணம் நகராட்சி வார்டு எண்.26 விண்டர்பேட்டை பேருந்து நிலையம் அருகில் உயர் கோபுர மின் விளக்கு (12மீ 6 செட் 200 watts LED) அமைத்தல். | 7.75 |
| 2. | அரக்கோணம் நகராட்சி நேருஜி நகர் 4–வது தெருவில் உயர் கோபுர மின் விளக்கு (12மீ 6 செட் 200 watts LED) அமைத்தல். | 7.75 |
| 3. | அரக்கோணம் நகராட்சி வார்டு எண்.04 TNHB மெயின் ரோட்டில் உயர் கோபுர மின் விளக்கு (12மீ 6 செட் 200 watts LED) அமைத்தல். | 7.75 |

**அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.1029/2019/இ1)**

**பொருள் எண் :03**

இந்நகராட்சியில் **பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி வளர்ச்சி திட்டம் 2019–2020** ன் கீழ் **24.03..2020**ம் தேதி கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1/ | 2/ | 3/ | 4/ | 5/ | 6/ | 7/ |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | பெயர் | அதிக சத விகிதம் |
| 1. | அரக்கோணம் நகராட்சி வார்டு எண்.26 விண்டர்பேட்டை பேருந்து நிலையம் அருகில் உயர் கோபுர மின் விளக்கு (12மீ 6 செட் 200 watts LED) அமைத்தல். | 7.75 | ராகவேந்திரா எலக்ட்ரிகல்ஸ் | 0.15% | வி.சதிஷ்குமார் | 0.25% |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2. | அரக்கோணம் நகராட்சி நேருஜி நகர் 4–வது தெருவில் உயர் கோபுர மின் விளக்கு (12மீ 6 செட் 200 watts LED) அமைத்தல். | 7.75 | ராகவேந்திரா எலக்ட்ரிகல்ஸ் | 0.15% | வி.சதிஷ்குமார் | 0.25% |
| 3. | அரக்கோணம் நகராட்சி வார்டு எண்.04 TNHB மெயின் ரோட்டில் உயர் கோபுர மின் விளக்கு (12மீ 6 செட் 200 watts LED) அமைத்தல். | 7.75 | ராகவேந்திரா எலக்ட்ரிகல்ஸ் | 0.15% | வி.சதிஷ்குமார் | 0.25% |

**அலுவலக குறிப்பு : வரிசை எண். 1 முதல் 3 வரையிலான பணிகளுக்கு மேற்படி வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண் .054/இ1/2020**

**பொருள் எண் :04**

இந்நகராட்சியில் **2019–2020**ன் கீழ் **24.03.2020**ம் தேதி கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1/ | 2/ | 3/ | 4/ | 5/ | 6/ | 7/ |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | பெயர் | அதிக சத விகிதம் |
| 1 | அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான **9.25** இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட விண்டபேட்டை தரைமட்ட நீர் தேக்க தொட்டியில் சோடியம் ஹைப்போ குளோரைடு திரவம் கலந்து பாதுகாக்கபட்ட குடிநீர் வழங்கப்பட Chlorination Pump புதியதாக அமைத்தல் | **4.00** | சபரி இன்ஜினியரிங் | 0.30% | ராஜா கணபதி இன்ஜினியரிங் | 0.34% |

**அலுவலக குறிப்பு : வரிசை எண். 1 க்கான பணிக்கு மேற்படி வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண் .887/இ1/2019**

**பொருள் எண் :05**

அரக்கோணம் நகராட்சி பகுதியில் கொரானா கோவிட்(19) வைரஸ் பரவாமல் தடுப்பு பணிகள் பல்வேறு முன்னெச்சிக்கை நடவடிக்கைள் மேற்கொள்ள கிருமி நாசினி பொருட்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் லைசால், கையுரை, மாஸ்க், பிளிச்சிங் பவுடர், நீர்த்த சுண்ணாம்பு, லிக்விட் குளோரின், பவர் ஸ்பேரையர், மஞ்சல் பை, டெட்டால் லிக்விட், 1% சோடியம் ஹப்போ குளோரைட், PPE, லைம்

பவுடர், சானிடைசர் ஆகியவற்றை கொள்முதல் செய்யவும், துண்டு பிரசுரங்கள் மற்றும் டிஜிட்டல் பேனர்கள் மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், ஆட்டோ மூலம் விளம்பரம் செய்வும் மற்றும் கொரானா கோவிட்(19) வைரஸ் தடுக்க எடுக்கப்படும் பல்வேறு நடவடிக்கைகளுக்கு ஆகும் தோராய செலவினம் ரூ. 60.00 லட்சத்திற்க்கு முன் அனுமதி பெற்று தொகைகள் வழங்கிட மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: கொரானா கோவிட்(19) வைரஸ் பரவாமல் தடுப்புபணி பொதுமக்களுக்கு இன்றியமையாத பாதுகாப்பு பணியாக உள்ளதால் பொதுமக்கள் மற்றும் பொதுநலன் கருதியும் அவசர அவசியத்தை முன்னிட்டு மன்றம் அனுமதிக்கலாம்**

**(ந.க.எண்.342/ எச்1/2020)**

**பொருள் எண் :06**

இந்நகராட்சி பகுதியில் கொரானா வைரஸ் காய்ச்சல் நோய் தடுப்பு பணிக்காக கபசுர குடிநீர் சூரணம் பொதுமக்களுக்கு விநியோகம் செய்திட கபசுர குடிநீர் சூரணம் 100 கிலோ கொள்முதல் செய்து வழங்குமாறு பார்வையில் காணும் துப்புரவு ஆய்வாளர் குறிப்பில் கோரப்பட்டுள்ளது. எனவே Tanpcol சென்னை, நிறுவனத்தின் மூலம் கொள்முதல் செய்து கொள்ள தொலைபேசியில் தொடர்ப்பு கொண்டு விவரம் கேட்டபோது கபசுர குடிநீர் சூரணம் 100 கிராமின் விலை ரூ.101/–(1 கிலோ ரூ. 1010/–) எனவும் தங்களுக்கு தேவைப்படும் கபசுர குடிநீர் சூரணத்திற்குண்டான தொகையிகை Tanpcol என்ற பெயருக்கு வங்கி வரைவோலை எடுத்து வழங்கினால் கபசுர குடிநீர் சூரணம் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. எனவே மேற்காணும் விவரப்படி தோராய செலவினம் ரூ. 1.10 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண் 326/எச்1/2020)**

**பொருள் எண் :07**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கணேஷ் நகர் பிரதான சாலை மிகவும் பழுதடைந்துள்ளதால் இந்த சாலை மிகவும் முக்கியமான இணைப்பு சாலையாக இருப்பதால் பழுதடைந்த பகுதிகளை WMM கொண்டு தற்காலிகமாக செப்பனிட தயரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9,20,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண் .887/இ1/2019**

**பொருள் எண் :08**

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோக பணிகளுக்கு தேவையான வால்வு ஆப்ரேட்டர் பணியாட்கள் நகராட்சியில் இல்லாத காரணத்தினால் 2020–21 ஆம் ஆண்டிற்கு குடிநீர் பணி மற்றும் இதர பணிக்கு தேவையான ஆட்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அனுமதித்துள்ள விலைப்பட்டியலின்படி அனுமதித்துள்ள தொகைக்கு தேவைக்கேற்ப சப்ளை செய்யும் பணிக்கு ஆகும் தோராய செலவினம் ரூ.910000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண் .887/இ1/2019**

**பொருள் எண் :09**

இந்நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட வார்டு எண்.05ல் நேருஜி நகர் பகுதியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான நவீன எரிவாயு தகனமேடை பராமரிப்பு பணியினை M/S MHT இன்ஜினியரிங் நிறுவனம் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. இப்பணியின் பணி காலம் 31.03.2020ல் முடிவடைவதாலும், தற்போது நகராட்சி பகுதிகளில் கொரனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகாக தமிழகம் முழுவதும் 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டு அனைத்து செயல்பாடுகளும் நிறுத்தப்பட்டுள்ளது. எனவே தற்போது ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத சூழ்நிலை உள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதி தொடர்ந்து பணி நடைபெற ஏதுவாக அதே

ஒப்பந்ததாரர் மூலம் அதே விலை விகிதத்தில் தொடர்ந்து பணி செய்ய 31.03.2021 வரையில் ஆகும் செலவுத்தொகை ரூ.978000/—ற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:- பணி அவசர அவசியம் கருதி அதே விலை விகிதத்தில் தொடர்ந்து பணி மேற்கொள்ள அனுமதி அனுமதிக்கலாம்.**

**ந.க.எண் .887/இ1/2019**

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**அரக்கோணம் நகராட்சி**